## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 186/2021 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | கேசவராஜ் | நாள் | 17.12.2024 |
| தகப்பனார் பெயர் | பதிசெட்டியார் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால், ஓரளவுக்கு தெரியும். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், 1ம் பிரதிவாதி சாந்தி என் அண்ணி, 2ம் பிரதிவாதி முரளி என் அண்ணன் மகன், 3ம் பிரதிவாதி விமலா என் அண்ணன் மகள் ஆவார். இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள பாகபாத்திய விடுதலை ஆவணத்தை நான் என் சகோதரர் சண்முகத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி பாகப்பாத்திய விடுதலை பத்திரம் குப்பம்பட்டியிலுள்ள காலிமனை நிலம் சம்மந்தப்பட்டது என்றால், சரிதான்.

2) மேற்படி பாகப்பாத்திய விடுதலை பத்திரம் தற்போது இவ்வழக்கிலுள்ள சொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால், சரிதான். மேற்படி பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் நான் என் சகோரர் சண்முகத்திடமிருந்து ரூ.4,25,000/-ஐ பெற்றுக்கொண்டு, அதில் கண்டுள்ள சொத்தின்பேரிலுள்ள எனது உரிமையை விடுதலை செய்துவிட்டதாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், அவ்வாறு நான் பணம் எதுவும் என் சகோதரிடமிருந்து வாங்கவில்லை.

3) மேற்படி பாகப்பாத்திய விடுதலை ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால், சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் நான் என் சகோதரிடமிருந்து ரூ.4,25,000/-ஐ பெற்றுக்கொண்டு, மேற்படி சொத்திலுள்ள எனது உரிமையை கையெழுத்து செய்து, விடுதலை செய்து கொடுத்துவிட்டு, தற்போது மேற்படி ஆவணத்தின் வாசகங்களுக்கு முரணாக அவ்வாறு பணம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

4) தற்போது இவ்வழக்கிலுள்ள சொத்தை நானும், என் சகோதரர் சண்முகமும் கூட்டாக கிரயம் பெற்றுள்ளோம் என்றால், சரிதான். மேற்படி கூட்டு கிரயம் பெற்ற ஆவணத்தை இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் நானும், என் சகோதரர் சண்முகம் ஆகிய இருவரும் சரிசமமாக அனுபவித்து கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தின்படி எனக்கும், என் சகோதருக்கும் அதில் கண்டுள்ள சொத்தில் சரிபாதி உரிமை உள்ளது என்றால், சரிதான்.

5) மேற்படி வா.சா.ஆ.2 ல் கண்டுள்ள சொத்துதான் தற்போது இவ்வழக்கின் சொத்து என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 வீட்டு வரி ரசீதுகளில் என் பெயரும், என் சகோதரர் பெயரும் கூட்டா உள்ளது என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.